தமிழ்ச் சிட்டு

நிலை என நிறுத்துவாய் உனை!

மதம் ஒரு புறம்உனைப்
பற்றி யிழுக்கும்; மடமை தரும்!
நிதம் உனைச் சாதிப்
பிறவியும் நின்றே நினைவூட்டும்!
பதவிகள் பணங்கள்
பளிச்சிடும் அரசியல் பழகவரும்!
எதெதற்கு நீ, உனை
இழப்பது? தம்பி, நன்(கு) எண்ணிடுவாய்!

கலை, காமக் கனவுகள்
உன்மனம் கலைக்கும்; கால்இழுக்கும்!
வலைகள் அவை! உனை
வயப்பட வைக்கும்; வாழ்வழிக்கும்!
விலைமதிப் பற்றதுன்
வாழ்க்கை! விலங்கில்லை; பறவையில்லை!
நிலையென நிறுத்துவாய்,
உனை! நல் அறிவினால், நெடுந்தொண்டால்!

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

குரல்: 21
இசை: 10
விலை: உருபா: 1-50

முத்து மொழிகள் !

ஃ பட்டங்களைப் பெறுவதில் இல்லை, பெருமை ! அவற்றைப் பெறுதற்குரிய தகுதியைப் பெறுவதுதான் பெருமை !

ஃ எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும் விழிப்பாக இருந்தால், போக வேண்டிய இடத்தை உறுதியாக அடையலாம்.

ஃ ஒருவரோடு ஒருவர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டால் அஃது இரட்டிப்பு ஆகும். துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால், அது பாதியாகக் குறையும்.

ஃ பெரியவர்கள் தங்களுக்குள்ள பெருந்தன்மையை எளியவர்களை நடத்துவதன் மூலம் காண்பிக்க வேண்டும்.

ஃ அமைவாக(நிதானமாக)ச் செயல்படுவதே இன்பத்தை முழுமையாக நுகர்வதற்குரிய நெறி.

ஃ சாக்குப் போக்குகள் கூற முயற்சி செய்யாமல் செயலைச் செய்து முடிப்பதே பெருமை.

ஃ வாழ்க்கை நீடிய காலத்தைக் கொண்டன்று ; நிகழ்த்திய அருஞ்செயல்களைக் கொண்டே மதிப்பிடப் பெற வேண்டும்.

ஃ அருஞ்செயல்களை நிறைவேற்றுவது வலிமையினால் அன்று ; விடாமுயற்சியினால்.

ஃ முடிந்த வழிகளில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த வகைகளில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த இடங்களில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த நேரங்களில் எல்லாம் நன்மை செய்.
முடிந்த பேர்களுக்கு எல்லாம் நன்மை செய்.

ஃ வாழ்க்கையில் உறவும் நட்பும் நீடித்திருக்க வேண்டுமானால், கீழ்க்காணும் ஆறு சொல் தொடர்களை மற்றவர்களிடம் தவறாமல் பயன்படுத்துங்கள் :

(1) ஒப்புக் கொள்கிறேன் ; இ'து என்னுடைய தவறுதான்; நானே பொறுப்பு.
(2) தங்களுடைய பணி சிறப்பானது ; மனமார்ந்த பாராட்டுதல்கள்.
(3) இதில் தங்களுடைய கருத்து என்ன ?
(4) தாங்கள் மனது வைத்தால்.
(5) மிக்க நன்றி. (6) நாம்.
(7) தேவையில்லாத உணர்வு ; நான்

ஃ அதிகாரத்தை அடிக்கடி பயன்படுத்துவதும், ஆராயாமல் பயன்படுத்துவதும், அதிகாரத்திற்கே குழி தோண்டுவதாகும். இடைவிடாமல் இடி இடித்து வந்தால், அதுவும் ஓர் ஆலையின் வல்லோசை போல், பழக்கம் ஆகி அச்சத்தைத் தகர்த்து விடும்.

ஃ உடல் நலம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும் ; நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் இருக்கும்.

ஃ எளிய உணவு தான் சிறந்தது ! அதிக உணவு வகைகள் அதிக நோய்களைக் கொண்டு வருகின்றன.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2023) கும்பம்-மீனம் (மார்ச்சு 92) [இசை-10

வரலாறு மறைக்கப்படுகிறது! தமிழ் இளைஞர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்!

நாம் வாழ்கிற நாடு தமிழ்நாடு. இஃது இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களில் ஒன்று. இவையன்றி இந்தியாவில் 7 நடுவண் அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளும் உண்டு. இந்திய மாநிலங்களில் இஃது ஒன்றாக இருந்தாலும் இஃது ஒரு நாடு என்று கூறப் பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

இத் தமிழ்நாடு பண்டைக் காலத்தில் மிகப் பெரிய ஒரு நாடாக இருந்தது. தமிழ் அரசர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தும், நாயக்கர்கள், தெலுங்கர்கள், மராட்டியர்கள், முகலீம்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்களால் பிற்காலத்தும், இத் தமிழ்நாடு பல்வேறு அரசர்களாலும் ஆளப்பட்டது. அதுவுமன்றித் தமிழ அரசர்கள் பண்டைக் காலத்தில் வடநாட்டுப் பகுதிகளையும் சேர்த்தே பல ஆண்டுக் காலம் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இந்த வரலாற்று உண்மையை தமிழ் மொழியிலுள்ள பண்டைய கழகக் கால இலக்கியங்கள் கூறுகின்றன:

"வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன்" —சிலப் :

''தென்குமரி வடபெருங்கல்
....
முழுதாண்டோர் வழிக்காவல! —புறம் : 17

''கடலக வரைப்பின் இப்
பொழில் முழு தாண்ட நின்
முன்திணை முதல்வர்'' —பதிற் : 8

''வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம்'' —பதிற் : 43

''அமைவரல் அருவி இமயம்விற் பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளக்கத்
தன்கோல் நிறீஇ'' —பதிற் : 1

''குமரியோடு வடவிமயத்து
ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்'' சிலப்.

—இவ்வாறு, 'நம் பழந் தமிழின ஆட்சி வரலாறு, அற்றைக் குமரிக் கண்டம் தொடங்கி, இந்தியா முழுமையும் விரிந்து பரந்து இமயமலை வரை நீண்டிருந்தது.'

'மிக்கோங்கி வளர்ந்திருந்த அப் பேரினத்தின் ஆட்சிப் பரப்பும், ஆளுமைச் சிறப்பும், பிற கலை, பண்பாட்டு, நாகரிகக் கூறுகளும், படிப்படியாக அழிந்தும் அழிக்கப்பட்டும் போய், இன்று ஆட்சி இழந்து, பெருமையிழந்து, வலிவிழந்து, ஓர் அடிமைப்பட்ட மிடிமையினமாக வாழ்ந்தும் வாழாமலும் இருந்து வருவது சிறுமையுடையது; இழிவுடையது' —('தமிழீழம்' XIX)

இந்தியா பழந்தமிழர் ஆட்சிக் காலத்தில் நாவலந்தீவு என்ற பெயரால் அழைக்கப் பெற்றது. ஆரியர்கள் வடக்கிருந்து இந்தியாவுக்குள் புகுந்து, பலநூறு ஆண்டுகளுக்குப் பின், படிப்படியாகப் பழந்தமிழர்களைத் தென்னாட்டிற்குக் குடி துரத்திவிட்டு வடவிந்தியப் பகுதிகளில் தங்கள் ஆட்சியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் காலூன்றச் செய்து, அதன் பின்னர் காலப் போக்கில் சிறிது சிறிதாக விரிவு படுத்தியும் கொண்டனர். அதன் பின்னர் அவர்கள் வடக்கில் வழங்கி வந்த வடதிராவிட மொழிகளாகிய பிராகிருதம், பாலி முதலிய மொழிகளைத் தாங்கள் ஏற்கனவே பேசிக் கொண்டு வந்த வேதமொழி என்னும் ஒரு நாடோடி மொழியுடன் கலந்து செற்கையாக சமஸ்கிருதம் என்னும் ஒரு மொழியை உருவாக்கிக் கொண்டனர்.

சமஸ்கிருதம் உருவாக்கப்படும் பொழுதே, பேச்சு வழக்கில்லாத ஒரு மொழியாக, வெறு குழுஉக்குறி மொழியாக, அஃதாவது ஒரு சங்கேத (தங்களுக்குள் மட்டுமே விளங்கிக் கொள்ளும் ஓர் அடையாள) மொழியாகத் —தோன்றியது. இந்தச் சமஸ்கிருதம் பல உரத்த ஒலிகளை(ஜ, ஹ, ஜ்ஜ, ஹ்ஹ, த்த, க்க போன்றவற்றை)க் கொண்ட மொழி. இம் மொழியைப் பற்றி ஆரியர்கள் பலவாறு சிறப்புகளைக் கூறி மக்களை ஏமாற்றினர். இதைத் தேவமொழி என்றனர். (தொடரும்)

கற்பனையும், நம்பிக்கையும்.

— அதியமான்

மாந்தர்களுடைய வாழ்க்கை கற்பனையிலேயே வளர்கிறது! வாழ்க்கையில் முன்னேற கற்பனைதான் வழி வகுக்கிறது.

கற்பனை என்றால் என்ன ?

தன்னுடைய வாழ்க்கை இப்படி, இப்படி அமைய வேண்டும் என்று எண்ணுவதைத்தான், அல்லது சிந்திப்பதைத்தான் கற்பனை என்கிறோம். கற்பனையை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று எண்ணி முடிந்த கற்பனை. இதைப்பற்றி எழுதுவதைத்தான் கற்பனைக் கதை என்கிறார்கள்.

இன்னொன்று எண்ணி முடியாக் கற்பனை, இதனைத் திட்டக் கற்பனை எனவும் கூறலாம்.

கற்பனையை வெற்றி பெறச் செய்ய நம்பிக்கை என்ற உணர்வு வேண்டும், நாம் எண்ணிய கற்பனையைச் செயல் படுத்த நம்பிக்கையில் உறுதி வேண்டும். அதனாலேயே திருவள்ளுவர்,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (குறள் 666)

என்றார்.

ஒன்றைச் செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர், அதில் வலிமையுடையவராக இருந்தால் நினைத்தவற்றை நினைத்தவாறே முடித்து விட முடியும். அதற்கு நாம் நினைத்தவற்றை வெற்றியோடு முடிப்பதற்கு, நினைத்துச் செயல்பட வேண்டியதில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையில் தொய்வு ஏற்பட்டால் நினைத்ததை அல்லது கற்பனையைச் செய்ய முடியாமல் போய் விடும். அதைத்தான் வெறுங் கற்பனை எனக் கூறுகிறோம். அது தவறு. கற்பனை வெறுமையுடையதன்று; அதைச் செய்து முடிக்கத் துணிவற்ற நம்பிக்கையின்மையாலேயே வெறுங் கற்பனை என்று தப்புக் கணக்குப் போட வைத்து விடுகிறது.

ஒரு மாணவன் வருங்காலத்தில் ஒரு சிறந்த மக்கள் தலைவனாக வரவேண்டும் எனக் கற்பனை செய்கிறான். அந்தக் கற்பனைத் திட்டத்தை தன்னுடைய முழு நம்பிக்கையால் செயல்படுத்த எண்ணி முயலுவானானால், உறுதியாக அவனால் அந்தக் கற்பனையைச் செய்து, வெற்றி பெற முடியும். செய்த கற்பனையில் நம்பிக்கை வைக்காமல், இது நம்மால் இயலாது எனத் தொய்வுபட எண்ணிவிட்டால் நம்பிக்கையின் தளர்ச்சியால் உயர்ந்த அக் கற்பனை பொய்க்கற்பனையாகி விடுகிறது. எனவே கற்பனைச் செடியை வளர்த்துப் பயன் தர வைப்பது நம்பிக்கை என்னும் உரமாகும்.

உறுதியான நம்பிக்கையால் தான் துணிவும் ஏற்படுகிறது. எனவே கற்பனை செய்யப்பட்ட ஒரு செயலை வெற்றியாக்க உறுதியான நம்பிக்கையும் துணிவும் இருந்தால் கற்பனையின் நோக்கத்தை முயற்சியால் வெற்றிக்குக் கொண்டு வந்து விடமுடியும்.

அருவருப்புப் பொருள்களே அழகு செய்ய உதவுகின்றன !

பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் பொருள்களில் பெரும்பாலானவை அருவருப்பும் தூய்மையற்ற கழிவும் கொண்ட பொருள்களே ஆகும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கருச்சிதைவுற்று வெளியேறும் குழந்தைப் பிண்டங்கள், குழந்தைகள் பிறக்கும் பொழுது வெளியாகும் நஞ்சுக் கொடிகள், குழந்தைப் பைகள் (பனிக்குடங்கள்) ஆகியவற்றிலிருந்தே, பெண்கள் தங்கள் முகங்களுக்குப் பூசி அழகுபடுத்திக் கொள்ளும் தோல் பொலிவு பூசுகுழைவுகள் (கிரீம்கள்) செய்யப் பெறுகின்றன.

மணப்பூச்சு நெய்மங்கள் (வாசனை எண்ணெய்கள்) விரைப் பூசு (செண்ட்) வகைகள், கூந்தல் நெய்கள், தோல் குழைவுகள், முக மழிப்புக்குப் பின் தடவும் கழுவு நீர்(லோஷன்)கள், உகிர் மெருகுப் பூச்சு(நகப் பாலிஷ்)கள் மற்றும் உதட்டுச் சாயங்கள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையின் வளர்ச்சிக்கு கற்பனை இன்றியமையாததாக இருப்பதால், அக்கற்பனையைச் செயல்படுத்தும் போது ஐயம் துளிர் விட்டு விடக் கூடாது. ஐயம் நம்பிக்கையைத் தளர்த்தி விடும். புறநானூற்றில் ஒரு காட்சி வருகிறது. ஒருவன் யானை வேட்டைக்குச் செல்கிறான். அதில் முழு நம்பிக்கையோடு ஐயம் இன்றிச் சென்று யானையோடு வருகிறான். இது நம்மாலும் ஆகுமோ என்று எண்ணிய ஒருவன் காடை வேட்டைக்குப் போகிறான்; அவனுக்கு அதையும் கொணரும் நம்பிக்கை இல்லாமையால் வெறுங்கையோடு திரும்புகிறான். முன்னவனுக்கு நம்பிக்கையில் ஐயமற்ற உறுதி இருந்தது; பின்னவனுக்குத் தான் செய்யப் போகும் செயலில் ஐயம் இருந்ததால் நம்பிக்கை இல்லாமல் வெறுங்கையோடு திரும்புகிறான்; இதனைப் புறம் 214-இல் கோப்பெருஞ்சோழன் கூறுகிறான்.

''செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறு அர் கசடு ஈண்டுகாட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல்லோரே
யானைவேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவண் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;

எனவே வாழ்க்கையில் முன்னேறக் கற்பனை எளிதாகத் தோன்றும்; அதைச் செயல் படுத்துவதில் ஐயம் ஏற்படாமல் உறுதியான நம்பிக்கையோடு செயல் பட வேண்டும். வெற்றி கிடைப்பது உறுதி; ○

முதலியவற்றுள் பெரும் பகுதி (சிலவற்றுள் 75 விழுக்காடு) வெறிமம் (ஆல்கஹால்) கலந்துள்ளது.

பெரும்பாலான முகப் பொலிவுப் பூச்சுகள் குழந்தைக் கருக்-களிலிருந்தே செய்யப் பெறுவதால் மேலை நாடுகளில் குழந்தைக் கருக்கள், கருப்பம் அடைந்த தாய்மார்களின் வயிற்றிலேயே விலை பேசப் பெற்று அழிக்கப் பெறுகின்றன. ஐரோப்பிய நாடு-களில் ஒரு குழந்தைக் கரு 200, 300 பிராங்குகள் (ஏறத்தாழ 1000, 1500 உருபா) அளவில் விலை போகின்றன. அழகுப் பொருளை உருவாக்குகின்ற தொழில் நிறுவனங்கள் அவற்றைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன.

அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பொது மருத்துவமனைக்கு மாந்தக் கருக்கள், கருச்சிதைவுக் குழந்தைகள், இறந்த குழந்-தைகள் ஆகியவற்றை விற்பதன் மூலம் 1976-இல் 68000 அமெரிக்க டாலர் (ஏறத்தாழ 16 இலக்கம் உருபா) வருமானம் கிடைத்ததென்று 'வாசிங்டன் அஞ்சல்' (The Washington Post) என்னும் தாளிகை கூறியுள்ளது.

அமெரிக்கக் கருக்கலைப்புச் சிறப்பு மருத்துவரான மார்வின் வீசுபெர்க் என்பவரின் வீட்டின் பின்புறமிருந்து 16,000 மாந்தக் கருக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை அழகுப் பொருள்கள் செய்தொழில் நிறுவனங்களுக்கு விற்பதற்காக வைக்கப்பெற்றி-ருந்தனவாம்.

மாந்த நஞ்சுக்கொடி, எலும்பு—குருத்தெலும்பு இணைப்பு இழைகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப் பெறும் 'கொல்லாஜன்' ஆகியவையும் முகப் பொலிவு, தோல்பொலிவுக் குழைவுகள் செய்யப் பயன்படுத்தப் பெறுகின்றன.

இனி, இவ்வாறு அழகு தரும் பொருள்களில் மட்டுமல்லாமல், குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான பால் தூளில் 100 விழுக்காடு பன்றிக் கொழுப்பும், 30 விழுக்காட்டுக்கு மேல் மாட்டுக் கொழுப்பும் கலக்கப் பெறுகின்றன. நாம் உடம்புக்குப் போட்டுக் குளிக்கும் விலையுயர்ந்த வழலை(சோப்பு)கள், பற்பசை-கள், தலை கழுவும் நுரைக்குழைகள் (ஷாம்புகள்), முகம் மழுக்கப் பயன்படுத்தும் நுரைப்பான்கள் முதலியவற்றுள் சேர்க்கப் பெறும் 'கிளிசரின்' என்னும் வேதியல் பொருள் பன்றிக் கொழுப்பிலிருந்தே செய்யப் பெறுகிறது.

இனி, குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்குக் கொடுக்-கப் பெறும் 'கிரைப் வாட்டர்' என்னும் மருந்துக் கலவையில் 10 விழுக்காடு 'வெறியம்' (ஆல்கஹால்) கலக்கப் படுவது, குழந்தைப் பருவத்திலிருந்தே மதுக் குடிப்பைப் பழக்கி விடுவ-தாகத்தான் பொருள். இன்னும் சொல்வதானால் ஒலியன்கள் (டானிக்குகள்) எனப்படும் அனைத்து உடல் நல மருந்துகளிலும் வெறியம் கலக்கப் படுகிறது.

சின்னச் சின்னக் கதைகள்!

—நசுருதீன் முல்லாவின் வேண்டுதல்!

நசுருதீன் முல்லா அலைகடலில் பயணம் போய்க்கொண்டிருந்தான். புயல் திடீரென வீசிற்று. கப்பல் புயலில் தத்தளித்தது. நசுருதீன் தன் 'அரண்மனை'யின் வளமான செல்வங்களை இழக்கப் 'போகிறோமே' என்று கலங்கினான். ஒருகால் அவனுடைய அழகிய 'அரண்மனையை' அரசன் விலைக்கு கேட்டான். அப்போது விலைக்கு விற்க மறுத்து விட்டோமே 'என்று புலம்பினான்' புயல் காற்று கடுமை ஆனது. முல்லா ஆண்டவனை வேண்டினான்:' ஆண்டவனே இந்தப் புயலிலிருந்து என்னைக் காப்பாற்று! அரண்மனையை விற்று அதில் வரும் பொருளை எல்லாம், ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்குவேன்.'

புயல் சிறிது அடங்கிற்று. முல்லாவின் மனத்தில் அலை; 'எதற்காக அரண்மனையை விற்க வேண்டும்; ஏழைகளுக்குக் கொடுப்பதாக உறுதி எடுத்துக் கொண்டது பிழை' என்று எண்ணினான்.

மறுபடி புயல் கடுமை கொண்டது. 'கடவுளே பொறுத்தருள்க; 'சொன்ன சொல்லைக் காப்பாற்றுவேன்: இஃது உறுதி' என்றான், புயலும் மாறி மாறி வீசியது. இவன் அச்சம், ஆண்டவனிடம் முறையிடச் செய்தது. ஒரு வகையாகப் புயலின் சீற்றம் கட்டுக்குள் வந்தது. முல்லாவும் 'ஆண்டவன் அருளால்' கரையேறினோம் என நம்பினான்.

உடனே, நாடெங்கும் அரண்மனையை விற்கப் போவதாக அறிவித்தான்; கூடவே, ஒரு 'தேரை' விலை சொன்னான். இரண்டையும் சேர்த்து வாங்க வேண்டுமென நெறி வகுத்தான். 'அரண்மனை விலை ஓர் உருபா; தேரின் விலை பத்திலக்கம்' என்றான்.

'என்ன கிறுக்கன்' என்று பேசிக் கொண்டே ஏலம் கேட்க வந்த அரசர், செல்வர் எல்லாரும் போட்டியிட்டனர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மார்ச்சளியை அகற்றி உடலையும் தேற்றுவதற்குரியதாக மருத்துவர்களால் பரிந்துரை செய்யப் பெறும் வாட்டர் பரீஸ் காம்பவுண்டு' என்னும் ஓவியனில் ஒவ்வொரு 90 அயிரி (மி.லி.)க்கும் 9.4 அயிரி வெறியம் கலக்கப் பெறுகிறது.

—ரசூல் கான்

நன்றி, 'சமரசம்' அக் 1-15

இறுதியில் அரசனே விலை தந்து அரண்மனையையும் 'தேரை' யும் வாங்கினன்.

முல்லா, 'தேரின்' விலையாகப் பெற்ற பத்திலக்கம் உருபாக்களைத் தனக்கு வைத்துக் கொண்டான். அரண்மனையின் விலையாகப் பெற்ற ஒரே ஒரு உருபாவை ஏழைகளுக்குத் தந்தான் முல்லா. இவ்வாறு 'ஆண்டவனிடம் வைத்த வேண்டுதலை நிறைவேற்றித் தனது' சொல்லுறுதியை நிலைநாட்டினன் முல்லா!

எல்லாம் உனக்காக!

ஒரு பணக்காரக் கிழவன் ஓர் ஏழை இளம் பெண்ணை மணம் புரிந்தான். காலம் ஓடிற்று. கிழவனுக்குச் சளி பிடித்தது. அது கடுங்காய்ச்சலானது. மூச்சு திணறிற்று. கிழவனுக்கு மருத்துவமனையில் 'உயிர்வளி' குழாய் வழியாகச் செலுத்திக் கொண்டிருந்தனர். அருகில் இளம் மனைவி கவலையோடு அமர்ந்து 'காற்றுக் குழலைக் கவனித்துக் கொண்டிருந்தாள். கிழவன் ஆறுதல் சொன்னன்... 'நான் சாகமாட்டேன். அப்படியே செத்தாலும் இந்தா திறவுகோல், உன் பேரில் வளமனை, வயல், காடு கரையெல்லாம் எழுதி வைத்துள்ளேன். ஆவணம் பெட்டியடியில் உள்ளது. 'தேசிய வைப்பகத்தில் ஐம்பதிலக்கம் வெள்ளி' 'உன் பேரில் நிலை வைப்பாகப் போட்டு வைத்துள்ளேன்'!

"ஆமா, கண்ணே, ஏன்' காற்றுக் குழலைக் கழற்றிக் கொண்டிருக்கிறய்", கிழவன் கேட்டான்! இளம் மனைவி சிரித்தாள்! அக் கிழவன் 'மீளா அமைதி'யில்!

—இரசனிசு - நூலிலிருந்து, தமிழில் : பறம்பை அறிவன்.

விண்மீன் ஆனர் சாக்ரடீசு!

ஒரு நாள் சாக்ரடீசு வெளியே உலாவப் போனர். வானை நோக்கினர். விண்மீன் ஒன்றைப் பார்த்தார்; அந்த விண்மீனவே மாறிவிட்டார். அதனோடு ஒன்றிவிட்டார். அந்த விண்மீனின் அழகில் ஈடுபட்ட விழிகள் மீளவில்லை. பொழுது அசைந்தது. பனி விழுந்தது. உறைபனியில் சாக்ரடீசும் உறைந்து போனர். அவருடைய மாணவர்கள் அவரைத் தேடியலைந்து கண்டுபிடித்த அப்போது, அவர் 'பெரும்பாலும் செத்து விட்ட நிலை.'

இரவெல்லாம் உறைபனியில் வைத்த விழி வாங்காமல் விண்மீனையே நோக்கியிருந்தார் சாக்ரடீசு. காலை வரை அப்படியே. அவரை அவருடைய மாணவர்கள் உலுக்கி அசைத்து எழுப்பினர்கள். அவர், மெல்ல, மெல்ல அசைந்தார். 'என்ன நேர்ந்தது?' என மாணவர்கள் கேட்க, சாக்ரடீசு "என்ன வியப்பு, நான் விண்மீனகிவிட்டேன்" என்ருர்.

—இரசனிசு - நூலிலிருந்து, தமிழில் : பறம்பை அறிவன்.

மகிழத் தமிழே நீ பேசு!

வணக்கம் என்று சொல்தம்பி !
வடசொல் வேண்டாம் நமஸ்காரம்.
மணக்கத் தமிழே நீ பேசு !
மகிழத் தமிழே நீ பேசு !

நன்றி என்று சொல்தம்பி !
நமக்கெ தற்கு தேங்ஸ்? வேண்டாம்.
கொன்று தமிழைச் சிதைப்பவர்கள்
கொடிய பகைவ ராம்அறிவாய் !

மகிழ்ச்சி இருக்கச் சந்தோஷம்
வரலா மாஉன் வாயினிலே ?
நெகிழத் தமிழே நீ பேசு !
நிறைவாய்த் தமிழே நீபேசு !

அம்மா அப்பா என்றேநீ
அன்னைத் தமிழில் அழைப்பாயே !
மம்மி டாடி நமக்கெதற்கு ?
மானக் கேடே ! விட்டொழிப்பாய்.

எந்தப் பயனும் எதிர்பார்க்காமல் செய்வதன்றோ தொண்டு!

காலைக் கதிரவன் பயனை எதிர்பார்த்தா
கடமையைச் செய்கின்ருன் ?
மாலையில் நிலவு வந்தொளி வீசுதல்
வருபயன் எதிர்பார்த்தா ?

வானம் எதனை எதிர்பார்த்து மண்ணில்
மழையைப் பொழிகிறது ?
ஆன கடமையை அவரவர் செய்தால்
அவனி சிறந்தோங்கும் !

எந்தப் பயனும் எதிர்பார்க்காமல்
செய்வதன்ருே தொண்டு !
இந்த நல்ல எண்ணம் வளர்ந்தால்
இன்பம் வாழ்வில் மண்டும்.

பாவலர். தமிழ்க்குமரன்—ஈரோடு

(நல்ல அறிவு முதிர்ச்சியுடைய குழந்தைகளின் பேச்சு, செயல் முதலியவை மிகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். பெரியவர்களால் பண்ண இயலாத கற்பனைத் திறன்களும், செயல் திறன்களும் சில நேரங்களில் அவர்கள் செய்வது, மிகவும் கவனித்து ஊக்கப்படுத்தத் தக்கன.

அத்தகைய குழந்தைகளின் பேச்சுகள், செயல்கள், நடவடிக்-கைகள் முதலியவற்றைக் கவனித்து இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள், குழந்தைகளின் படங்களையும் அவர்களின் முழுப் பெயர். அகவை, கல்வி வகுப்பு முதலியவற்றையும் அனுப்புவது நல்லது.)

1. செந்தணலின் குறும்புகள் (தொடர்ச்சி)

—சித்திரச் செந்தாழை ஆறிறைவன், அறி. மு.

3. அம்மாவுக்குத் தண்டனை

ஒரு முறை இரவில் செந்தணல் முட்டை, உருளைக்கிழங்குக் குழம்பை மிகவும் விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான். "அம்மா, மிகவும் நன்றாக இருக்கிறது—இன்னும் கொஞ்சம் சோறு போட்டுக் கொண்டு வா!" என்றான்.

பிறகு நான் கொஞ்சமாகச் சோறு போட்டுக் கொடுத்தேன். அதனையும் ஆவலாகச் சாப்பிட்டு முடிக்கையில், வாந்தி வருவது போன்ற உணர்ச்சியில் எழுந்தான். எதிர்பார்த்தது தான்.

நான், "தணல், வாந்தி ஒன்றும் வராது. கொஞ்சம் வெளியே போய் நின்று விட்டு வா. அ'து உள்ளே போய் விடும்" என்று கூறினேன்.

அவன் அந்தப் புறமும் இந்தப் புறமும் சரிபடுத்திக் கொள்ள முடியாமல் அலைந்தான். பிறகு குளியலறைக் கழிவுத் தொட்டிக்-குப்போய் அனைத்தையும் வாந்தி எடுத்தே விட்டான்.

எனக்கு சரியான கோபம். அவன் முதுகில் ஓர் அறை அறைந்தேன்.

"நான் முன்பே சொன்னேன், 'அளவாகச் சாப்பிடு' என்று. நீ தான் கேட்கவில்லை. இப்பொழுது பார், எல்லாவற்றையும் வீணாக்கி விட்டாய். உனக்குமில்லை, யாருக்கும் இல்லாமல் வீணாகப் போய் விட்டது" என்று கோபக் குரலில் கடிந்து கொண்டேன்.

முன்பெல்லாம் ஓர் அடிவைத்தால் கூடபேசாமல் இருப்பான்; இப்பொழுது ஓர் அடி வைத்தால் அவன் தன் பெருமையே குறைந்து விட்டது போல் எண்ணி மிக மிகக் கோபம் கொள்கிருன்; தலைக் குனிவைத் துளியும் விரும்புவதில்லை.

நான் அடித்த அந்த ஓர் அடியால் அழுது கொண்டே ஆங்கிலத்தில் கீழ் வருமாறு சொற்களைக் கொட்டினுன்;

"அம்மா, Only today I vomitted - But howmany times you vomitted. But I did not even ask any question-But only one time I vomitted. But you beated me and talked me without nicely. It is not fare. you did wrong ! you should go out ! My appa takes care of me" (அம்மா, இன்று மட்டுந்தான் நான் வாந்தி எடுத்தேன். ஆனுல், நீ எத்தனை முறைகள் வாந்தி எடுத்திருக்கிருய். (நான் வயிறு வாய்த்திருந்த நிலையில் வாந்தி எடுத்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிருன்.) ஆனுல், உன்னை ஒரு தடவை கூட ஒரு கேள்வியும் கேட்டதில்லை. ஆனுல் நான் ஒரே ஒரு முறை வாந்தி எடுத்ததற்கு, நீ என்னை அடித்து விட்டாய்; அதுவுமில்லாமல் அன்பின்றிப் பேசுகிருய். இது நன்ருக இல்லை. நீ தவறு செய்து விட்டாய்: அதற்காக நீ வெளியே போய் விட வேண்டும். என் அப்பா என்னை கவனித்துக் கொள்வார்;)

"வெளியே போ என்ருல், எங்கே போகட்டும்? எப்போது வரட்டும்? எனக்கு வெளியில் இருட்டில் அச்சமாக இருக்குமே, எப்படி?" என்று கேட்டேன்;

"O.K. Anyway I want to punish you. so you have to have a punishment, atleast one night. you should stand the whole night at a place which is 10 feet far away from house." (சரி எப்படியிருந்தாலும், நான் உனக்குத் தண்டனை கொடுக்கவே விரும்புகிறேன். எனவே தண்டனையை நீ பெற்றுத் தான் ஆக வேண்டும். குறைந்தது ஓர் இரவாயினும், வீட்டிற்கு வெளியே 10 அடி தொலைவில் ஒரு முழு இரவும் நீ நின்று கொண்டு இருக்க வேண்டும்.) என்று சொன்னுன்.

"அப்படியா ! ஓர் இரவு முழுவதுமா? யாரேனும் வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போய் விடுவார்களே! —என்று கூறி, அழுவது போல் நடித்துக் காட்டினேன்.

அதற்கு அவன், நான் உண்மையிலேயே அழுவது போல் கருதிக் கொண்டு, அவன் மறுபுறம் திரும்பி நின்றவாறு, அவனும் அழுது கொண்டே,

"Amma, don't cry ! If you cry, I will cry, your cry makes me cry ! don't cry like a Baby. Stop it! stop your cry Amma ! But you have to have my punishment anyway."

(அம்மா, அழாதே! நீ அழுதால் நானும் அழுவேன்! உன்னுடைய அழுகை என்னேயும் அழ வைக்கிறது! குழந்தையைப் போல அழாதே! நிறுத்து! நிறுத்து அம்மா, உன் அழுகையை! எப்படியானாலும், கண்டிப்பாக நீ, நான் கொடுத்த தண்டனையை ஏற்க வேண்டும்) என்றான்;

உடனே நான், "சரி! நான் உன்னை அடித்தது தவறு தான்! நான் அதற்காக வெளியில் போய் நிற்கிறேன். ஆனால், என் வயிற்றில் உள்ள குழந்தை எந்தத் தவறும் செய்யவில்லையே! அதுவும் என்னுடனே வந்து இரவு முழுவதும் அங்கு நிற்பது என்பது எப்படி ஞாயம் ஆகும்?" என்று கேட்டேன். அதற்கு அவன்,

"O.K. because the Baby didnot do any mistake, so I will accompany with her or him. That means I will stay with you" (சரி, அந்தக் குழந்தை எந்தத் தவறும் செய்யவில்லைதான். அதனால் அந்தக் குழந்தை உன்னுடன் சேர்ந்து நிற்கும் போது நானும் அவளுடன் அல்லது அவனுடன் சேர்ந்து நிற்கிறேன்.) என்று கூறி முடித்தான்.

பிறகு, அவனைக் கட்டி ஒரு முத்தம் கொடுத்து அவனை இளக வைத்தேன்.

அந்தத் தண்டனை ஏற்கப்பட்டதா, இல்லையா என்று அவனிடமே கேளுங்கள்!

4. வயிற்றில் உள்ள குழந்தை யாரைப் போல் இருக்க வேண்டும்?

"தணல் குட்டி! வயிற்றில் உள்ள குழந்தை பெண்ணாக இருந்தால் யாரைப் போல் முகம் இருக்க வேண்டும்;

"உன்னைப் போல் இருக்க வேண்டும், அம்மா!"

"ஆணாக இருந்தால்...?"

"பொழில் மாமாவைப் போல...!"

5. அம்முப்பா நாற்காலி!

"அப்பா, உங்களுக்குத் தெரியுமா?"

என்ன?"

"அம்மும்மா வீட்டில் எனக்கென்று நாற்காலி ஒன்று இருக்கிறது; எனக்கு அம்முப்பா அதைக் கொடுத்து விட்டார்!"

(தொடரும்)

கொள்கைக் குன்றாய் நிலைத்திடு!
குன்றாப் புகழைப் பெற்றிடு!

—அரக்கோணம் சங்கரபாண்டியன்—

இடுக்கண் வந்தால் நகைத்திடு—தம்பி
இடையூறு வந்தால் தாங்கிடு!
நடுநிலையில் என்றும் இருந்திடு—தம்பி
நாடு போற்ற செயல்படு!

எவரிடமும் அன்பாய்ப் பழகிடு—தம்பி
எல்லாரையும் சமமாய் மதித்திடு!
குவலயம் போற்ற வளர்ந்திடு—தம்பி
கொள்கைக் குன்றாய் நிலைத்திடு!

ஆராய்ந்து எதையும் ஏற்றிடு—தம்பி
ஆற்றலை வளர்த்தே உயர்ந்திடு!
சீராய் வாழ்வை வாழ்ந்திடு—தம்பி
சிந்தையால் உலகை வென்றிடு!

பணிவை வாழ்வில் கொண்டிடு—தம்பி
பண்பைப் போற்றிக் காத்திடு!
துணிவை வளர்த்துக் கொண்டிடு—தம்பி
துயரை வென்று நிலைத்திடு!

அடங்கி இருக்கப் பழகிடு—தம்பி
அன்பை வாழ்த்தி மகிழ்ந்திடு!
தொடங்கிய செயலை முடித்திடு—தம்பி
தொடர்ந்து முயற்சி செய்திடு!

பிறர்க்கும் உதவி புரிந்திடு—தம்பி
பிறந்த பயனைப் பெற்றிடு!
சிறந்த நூல்கள் படித்திடு—தம்பி
சிரித்தே வாழ்வைக் கழித்திடு!

பேச்சால் பிறரைக் கவர்ந்திடு—தம்பி
பெரும்பிழை செய்ய அஞ்சிடு!
மூச்சாய்க் கொள்கையைக் கொண்டிடு—தம்பி
முனைப்பாய் உழைத்தே உயர்ந்திடு!

மனத்தால் வளர எண்ணிடு—தம்பி
மாண்பால் எவரையும் கவர்ந்திடு!
குணத்தால் மக்களை ஈர்த்திடு—தம்பி
குன்றாப் புகழைப் பெற்றிடு!

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

30. அல்பேனியா (ALBANIA) —குடியரசு.

நிலப்பரப்பு : 28,748. ச.அ.மா.
மக்கள் தொகை : 28,50.000
மக். தொ. பெ. (ஆண்டுக்கு) 2.4%
மக். வாணாள் எல்லை : ஆண் : 68, பெண் : 71 (ஆண்டு)
எழுத்தறிவு : 75%
தலைநகர் : திரானா (Tirana)
மொழி : அல்பேனியன்
நாணயம் : லெக் —100 கிண்டார்கா.

31. பல்கேரியா (BULGARIA) —குடியரசு.

நிலப்பரப்பு : 1,10,912. ச.அ.மா.
மக். தொ. : 89,30,000.
மக். தொ. பெ. : (ஆண்டுக்கு) 0.6%
மக். வா. எ. : ஆண் : 69, பெண் : 75 (ஆண்டு)
எழுத்தறிவு : 95%.
தலைநகர் : சோஃபியா
மொழி : பல்கேரியன்
நாணயம் : லெவ் —100 இசுடோடிங்க்

32. டர்க்கி (TURKEY) —குடியரசு

நிலப்பரப்பு : 7,79,452 ச.அ.மா.
மக். தொ. : 4,80,00,000.
மக். தொ. பெ. : (ஆண்டுக்கு) 2.5%.
மக். வா. எ. : ஆண் : 58, பெண் : 63 (ஆண்டு)
எழுத்தறிவு : 70%.
தலைநகர் : டர்க்கிஷ்
மொழி : மோசுலெம்
நாணயம் : டர்க்கிசு லிரா = 100 குருசு

33. மால்ட்டா (MALTA) —குடியரசு.

நிலப்பரப்பு : 316. ச.அ.மா.
மக். தொ. : 3,30,000.
மக். தொ. பெ. : 0.9%.
மக். வா. எ. : ஆண் : 69, பெண் : 73 (ஆண்டு)
எழுத்தறிவு : 83%.
தலைநகர் : வாலெட்டா
மொழி : மால்ட்டீசு, ஆங்கிலம்
நாணயம் : மால்ட்டிய லிரா = 100 செண்ட்சு = 1000 மில்சு.

34. கிரீஸ் (GREECE) —குடியரசு.

நிலப்பரப்பு : 1,31,944 ச.அ.மா.
மக்.தொ. : 97,50,000
மக். தொ. பெ. : 0.6%
மக். வா. எ. : ஆண் : 71, பெண் : 75 (ஆண்டு)
எழுத்தறிவு : 95%
தலைநகர் : ஏதென் (ஏதென்சு)
மொழி : கிரீக்
நாணயம் : டிரெச்மா = 100 லெப்டா

35. சைப்ரஸ் (CYPRUS) —குடியரசு.

நிலப்பரப்பு : 9,251 ச.அ.மா.
மக். தொ. : 6,55,000.
மக். தொ. பெ. : 0.4%
மக். வா. எ. : ஆண் : 70, பெண் : 74 ஆண்டு
எழுத்தறிவு : 69.%.
தலைநகர் : நிக்கோசியா
மொழி : கிரீக், டர்க்கிஷ்
நாணயம் : சைப்ரஸ் பவுண்டு = 100 Cents

(ஐரோப்பிய நாடுகள் 35-உம் இத்துடன் முடிவடைந்தன. இனி ஆசிய நாடுகளைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.)

ஆசிய நாடுகள் : 40

1. சோவியத்து ஒன்றியம்: (குடியரசு) ஆசிரியப் பகுதி.

(இந்த ஒன்றியத்தில் உள்ள 15 மாநிலங்(நாடு)களில் இக்கால் ஆறு மாநிலங்கள் தனி நாடுகளாகப் பிரிந்து விட்டன. இவ்வொன்றியத்தின் பெரிய மாநிலம் (நாடு) ஆன உருசியா பிற எஞ்சிய நாடுகளுடன் சேர்ந்து இயங்க முனைந்துள்ளது. இன்னும் சில நிலைகளில் சோவியத்து ஒன்றியம் சீர் குலைவுற்றுள்ளது. எனவே முன்னிருந்த விளக்கங்களே, சில விளக்கங்களின் பொருட்டு இங்குக் கொடுக்கப் பெறுகின்றன. பிற விளக்கங்களை இத்தொடர் கட்டுரையின் முடிவில் காணலாம்.)

நிலப்பரப்பு : 2,24,02,200 ச.அ.மா.
மக். தொ. : 27,63,00,000
மக். தொ. பெ. : (ஆண்டுக்கு) 0.9%
மக். வா. எ. : ஆண் : 65, பெண் ; 74 (ஆண்டு)
எழுத்தறிவு : 99%
தலைநகர் : மாஸ்கோ
மொழி : அல்டாயிக் (டர்கிஷ் முதலியவை) பிற ஐரோப்பிய மொழிகள், யுரேனியன், காகேசியன்
நாணயம் : ரூபிள் —100 கோபெக். (தொடரும்)

உலகம் உன் பின் ஓடிவரும்!

—பாவலர். இளஞ்சித்திரன்—

அதையும் இதையும் பார்த்துத் தம்பீ,
அலைமலைவு அடையாதே!
அடடா! உலகில் உன்னை மீறி
ஒன்றும் கிடையாதே!
கதைகள், கற்பனைக் கனவுகள் தம்மில்
காலம் கடத்தாதே!
கைகளை நம்பு! கடமையை நம்பு!
கண்களைக் கசக்காதே!

எடுத்தது முடிக்கும் எண்ணம் வேண்டும்!
எதையும் நினைக்காதே!
எண்ணம் சிதறின் எல்லாம் சிதறும்!
எடுத்தது நடக்காதே!
அடுத்தெது வாயினும் அச்சம் இருந்தால்
ஆவதும் ஆகாதே!
அதனால் தம்பீ, அச்சம் தொலைப்பாய்!
அதன்வழி போகாதே!

ஊக்கம் உடைமை! உழைப்பே கடமை!
ஒன்றுக்கும் மயங்காதே!
உலகம் உன்பின் ஓடியே வரும்! நீ
உழைக்கத் தயங்காதே!
தாக்கம் வரும்தான்; வந்தால் வரட்டும்!
தாண்டிச் சென்றிடுவாய்!
தாண்டிச் செல்வதில் தான்உன் வெற்றி!
தானே வென்றிடுவாய்!

உன்னால் மாந்தர் உயரட்டும்.

சாலையின் குறுக்கே ஓடாதே!
சாதியை மதத்தை நம்பாதே!
வேலையைத் தள்ளிப் போடாதே!
விடிந்த பின்னும் தூங்காதே!

மூத்தவர் சொல்லைத் தட்டாதே!
முணுக்கெனக் கோபம் கொள்ளாதே!
ஈந்தவர் வழியை மறவாதே!
என்றும் கடமை தவறாதே!

உன்னால் மாந்தர் உயரட்டும்!
உலகம் உன்னை வணங்கட்டும்!
அன்பால் உலகை வென்றிடுவாய்!
அதற்கென இன்றே உழைத்திடுவாய்!!

—ஆ.ச. மாரியப்பன், புதுக்கோட்டை-1.

தெரிந்து கொள்ளுங்கள்

- சமற்கிருதத்தில் உள்ள திருவேங்கடமுடையான் திருப்பள்ளிஎழுச்சியாகிய சுப்ரபாதத்தை எழுதியவர் அன்னமாச்சாரிய அடிகள் (சுவாமிகள்) ஆவார். இதை இக்கால் தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளவர் பேரா. ஜே. பார்த்தசாரதி ஆவார். இவ்விரு பாடல்களையும் இன்னிசைக் குயில் எம். எசு. சுப்புலட்சுமி பாடியுள்ளார். இத்தமிழிசை ஒலியிழை திசம்பர் 9-இல் வெளியிடப் பெற்றுள்ளது.

- 1991-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், இராசீவ் கொலைக்கு முன்னர் 211 தொகுதிகளில் பேராய(காங்கிரசு)க்கட்சி படுதோல்வி அடைந்தது; 55 தொகுதிகளில்தான் வெற்றி பெற்றது. ஆனால் அவர் படுகொலைக்குப் பின்னர் நடந்த 294 தொகுதிகளில் 170 இல் அது வெற்றி பெற்றுள்ளது.

- சோவியத்து ஒன்றியத்தின் அணுக்கருவி ஏவுகணைகளை ஏவ உதவும் அடையாளக்குறி அழுத்தி (பட்டன்) என்பது ஒரு வகைக் கமுக்கமான குழூஉக்குறி எழுத்துகளாகும். இந்த எழுத்துகள் ஒரு கைப்பெட்டியில் வைக்கப்பெற்றுப் பூட்டப் பெற்றிருக்கும். அண்மையில் சோவியத்து ஒன்றியப் பதவியையும் அணுக்கருவி அதிகாரத்தையும் முன்னாள் சோவியத்து தலைவர் கொர்பச்சேவ், இன்றைய உருசியத் தலைவர் எல்த்திசினுக்கு மாற்றிக் கொடுத்தது தெரிந்திருக்கும்.

- இந்தியாவில் உள்ள 5 இயங்கி (கார்) தொழிற்சாலைகளிலிருந்தும் ஆண்டுக்கு 2 இலக்கத்து 25 ஆயிரம் இயங்கிகளும் 1¼ இலக்கம் பேருந்து, சரக்குந்துகளும், 19 இலக்கம் மிதியுந்து (மோட்டார் சைக்கிள்), குதியுந்து (ஸ்கூட்டர்) முதலியவையும் உருவாக்கப் பெறுகின்றன.

- சென்ற ஆண்டு குவைத்தில் நடந்த வளைகுடாப் போருக்கு ஆன மொத்த செலவு ஓர் இலக்கத்து அறுபத்து நான்கு ஆயிரத்து எழுநூறு கோடி (1,64,700) உருபா.

- இந்திய மக்களின் சராசரி வாணாள் காலம் நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் 24 ஆண்டுகள். இன்றைய நிலையில் 56 ஆண்டாக உயர்ந்திருக்கிறது.

- பஞ்சாபில் ஒரு நாளில் சராசரி 9 கொலைகளும், காசுமீரில் 6 கொலைகளும் நடைபெறுகின்றன. 1991-ஆம் ஆண்டில் மட்டும் இவ்விரண்டு மாநிலங்களிலும் முறையே 3200-உம், 2300-உம் கொலைகள் நடைபெற்றுள்ளன.

- ஆசுத்ரேலியாவில் ஏறத்தாழ 25000 இந்தியர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் ஏறத்தாழ 7000 பேர் தமிழர்கள்.

- வாழ்நாள் முழுவதும் உழைத்தால் தான் ஒரு துறையில் உயர்நிலையை அடைய முடியும்; அதற்கும் குறைந்த விலையில் அந் நிலையை வாங்க முடியாது;
- செயல் சிறிதோ பெரிதோ, தம்மால் செய்யக் கூடியவற்றைச் சலிப்பின்றிச் செய்பவரே போற்றுதற்குரியர்;
- அழுக்காறு (பொறாமை) கொள்ளாதீர்கள்; நெருப்பு விறகை அழித்து விடுவதைப் போல் அழுக்காறு அறச் செயல்களை அழித்து விடும்;
- அடக்கம் என்பது தன்னைத்தான் சரியாக மதிப்பிட்டுக் கொள்வதால் வரும் ஒரு நல்லுணர்வு ஆகும்;
- அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்;
- ஒவ்வொருவரும் பிழை செய்யக் கூடியவரே, ஆனால் மூடர்களைத் தவிர செய்த பிழையையே யாரும் திரும்பச் செய்வதில்லை;
- எல்லா இயக்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் பயிற்சிப் பள்ளி குடும்பந்தான்;
- சிந்தனை இல்லாத படிப்பு, படிப்பில்லாத சிந்தனை தீமை தருபவை;
- வெற்றிக்கு அடிப்படை கடின உழைப்பு, நேர்மை, விடா முயற்சி, உறுதியான எண்ணம்;
- ஊக்கமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே பெற முடியாது.
- உழைத்துப் போராடாமல் வெற்றியடைய இயலாது; வேற்றுமையை நீக்குவதே வெற்றிக்கு வழி;
- துன்பங்களைப் பொறுத்துக் கொள்பவனே, வெற்றி பெறுவான்;
- தன் இலக்கைச் சரியாகத் தெரிந்து கொண்டு அதை நோக்கி விடா முயற்சியுடன் செல்பவனே வெற்றி அடைகிறான்;

(தொகுப்பு : முனைவர்: சா மெய்யப்பன்)

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 36.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 18.00
தனியிதழ்	:	,, 3.00

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய மாத இருமுறை இதழ்.

தனியிதழ்	விலை	உரு.	1-50
ஆண்டுக் கட்டணம்	,,	,,	36-00
அரையாண்டுக் கட்டணம்	,,	,,	18-00

தென்மொழி, தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை 5-

தமிழ் நாள் காட்டி !

பெரிய எண் தமிழ் நாள்; சிறிய எண் ஆங்கில நாள்.

திருவள்ளுவர் ஆண்டு 2023

கிழமை	சுறவம் (தை) சனவரி - பிப்ரவரி					கும்பம் (மாசி) பிப்ரவரி - மார்ச்சு				
ஞாயிறு		5 (19)	12 (26)	19 (2)	26 (9)		4 (16)	11 (23)	18 (1)	25 (8)
திங்கள்		6 (20)	13 (27)	20 (3)	27 (10)		5 (17)	12 (24)	19 (2)	26 (9)
செவ்வாய்		7 (21)	14 (28)	21 (4)	28 (11)		6 (18)	13 (25)	20 (3)	27 (10)
அறிவன்	1 (15)	8 (22)	15 (29)	22 (5)	29 (12)		7 (19)	14 (26)	21 (4)	28 (11)
வியாழன்	2 (16)	9 (23)	16 (30)	23 (6)		1 (13)	8 (20)	15 (27)	22 (5)	29 (12)
வெள்ளி	3 (17)	10 (24)	17 (31)	24 (7)		2 (14)	9 (21)	16 (28)	23 (6)	30 (13)
காரி	4 (18)	11 (25)	18 (1)	25 (8)		3 (15)	10 (22)	17 (29)	24 (7)	
	மீனம் (பங்குனி) மார்ச்சு - ஏப்ரல்					மேழம் (சித்திரை) ஏப்ரல் - மே				
ஞாயிறு	30 (12)	2 (15)	9 (22)	16 (29)	23 (5)		7 (19)	14 (26)	21 (3)	28 (10)
திங்கள்		3 (16)	10 (23)	17 (30)	24 (6)	1 (13)	8 (20)	15 (27)	22 (4)	29 (11)
செவ்வாய்		4 (17)	11 (24)	18 (31)	25 (7)	2 (14)	9 (21)	16 (28)	23 (5)	30 (12)
அறிவன்		5 (18)	12 (25)	19 (1)	26 (8)	3 (15)	10 (22)	17 (29)	24 (6)	31 (13)
வியாழன்		6 (19)	13 (26)	20 (2)	27 (9)	4 (16)	11 (23)	18 (30)	25 (7)	
வெள்ளி		7 (20)	14 (27)	21 (3)	28 (10)	5 (17)	12 (24)	19 (1)	26 (8)	
காரி	1 (14)	8 (21)	15 (28)	22 (4)	29 (11)	6 (18)	13 (25)	20 (2)	27 (9)	
	விடை (வைகாசி) மே - சூன்					ஆடவை (ஆனி) சூன் - சூலை				
ஞாயிறு	32 (14)	4 (17)	11 (24)	18 (31)	25 (7)		7 (21)	14 (28)	21 (5)	28 (12)
திங்கள்		5 (18)	12 (25)	19 (1)	26 (8)	1 (15)	8 (22)	15 (29)	22 (6)	29 (13)
செவ்வாய்		6 (19)	13 (26)	20 (2)	27 (9)	2 (16)	9 (23)	16 (30)	23 (7)	30 (14)
அறிவன்		7 (20)	14 (27)	21 (3)	28 (10)	3 (17)	10 (24)	17 (1)	24 (8)	31 (15)
வியாழன்	1 (14)	8 (21)	15 (28)	22 (4)	29 (11)	4 (18)	11 (25)	18 (2)	25 (9)	
வெள்ளி	2 (15)	9 (22)	16 (29)	23 (5)	30 (12)	5 (19)	12 (26)	19 (3)	26 (10)	
காரி	3 (16)	10 (23)	17 (30)	24 (6)	31 (13)	6 (20)	13 (27)	20 (4)	27 (11)	

ஆங்கில ஆண்டு 1992

கிழமை	கடகம் (ஆடி) சூலை - ஆகஸ்ட்டு					மடங்கல் (ஆவணி) ஆகஸ்ட்டு - செப்டம்பர்				
ஞாயிறு	32 (16)	4 (19)	11 (26)	18 (2)	25 (9)		7 (23)	14 (30)	21 (6)	28 (13)
திங்கள்		5 (20)	12 (27)	19 (3)	26 (10)	1 (17)	8 (24)	15 (31)	22 (7)	29 (14)
செவ்வாய்		6 (21)	13 (28)	20 (4)	27 (11)	2 (18)	9 (25)	16 (1)	23 (8)	30 (15)
அறிவன்		7 (22)	14 (29)	21 (5)	28 (12)	3 (19)	10 (26)	17 (2)	24 (9)	31 (16)
வியாழன்	1 (16)	8 (23)	15 (30)	22 (6)	29 (13)	4 (20)	11 (27)	18 (3)	25 (10)	
வெள்ளி	2 (17)	9 (24)	16 (31)	23 (7)	30 (14)	5 (21)	12 (28)	19 (4)	26 (11)	
காரி	3 (18)	10 (25)	17 (1)	24 (8)	31 (15)	6 (22)	13 (29)	20 (5)	27 (12)	
	கன்னி (புரட்டாசி) செப்டம்பர் - அக்டோபர்					துலாம் (ஐப்பசி) அக்டோபர் - நவம்பர்				
ஞாயிறு		4 (20)	11 (27)	18 (4)	25 (11)	30 (15)	2 (18)	9 (25)	16 (1)	23 (8)
திங்கள்		5 (21)	12 (28)	19 (5)	26 (12)		3 (19)	10 (26)	17 (2)	24 (9)
செவ்வாய்		6 (22)	13 (29)	20 (6)	27 (13)		4 (20)	11 (27)	18 (3)	25 (10)
அறிவன்		7 (23)	14 (30)	21 (7)	28 (14)		5 (21)	12 (28)	19 (4)	26 (11)
வியாழன்	1 (17)	8 (24)	15 (1)	22 (8)	29 (15)		6 (22)	13 (29)	20 (5)	27 (12)
வெள்ளி	2 (18)	9 (25)	16 (2)	23 (9)	30 (16)		7 (23)	14 (30)	21 (6)	28 (13)
காரி	3 (19)	10 (26)	17 (3)	24 (10)		1 (17)	8 (24)	15 (31)	22 (7)	29 (14)
	நளி (கார்த்திகை) நவம்பர் - திசம்பர்					சிலை (மார்கழி) திசம்பர் - சனவரி				
ஞாயிறு		7 (22)	14 (29)	21 (6)	28 (13)		5 (20)	12 (27)	19 (3)	26 (10)
திங்கள்	1 (16)	8 (23)	15 (30)	22 (7)	29 (14)		6 (21)	13 (28)	20 (4)	27 (11)
செவ்வாய்	2 (17)	9 (24)	16 (1)	23 (8)	30 (15)		7 (22)	14 (29)	21 (5)	28 (12)
அறிவன்	3 (18)	10 (25)	17 (2)	24 (9)		1 (16)	8 (23)	15 (30)	22 (6)	29 (13)
வியாழன்	4 (19)	11 (26)	18 (3)	25 (10)		2 (17)	9 (24)	16 (31)	23 (7)	
வெள்ளி	5 (20)	12 (27)	19 (4)	26 (11)		3 (18)	10 (25)	17 (1)	24 (8)	
காரி	6 (21)	13 (28)	20 (5)	27 (12)		4 (19)	11 (26)	18 (2)	25 (9)	

மாணவர் நகலகம் அடையாறு சென்னை 600 020 தொலைபேசி 41 13 58

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். - திருக்குறள்

நன்றி : வ. வேம்பையன், கல்பாக்கம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)